# கோண்டாவில் கிழக்கு
# அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன்
# திருப்புகழ்



தவ.தஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# கோண்டாவில் கிழக்கு
# அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன்
# திருப்புகழ்


**ஆக்கம்: தவ.தஜேந்திரன்**

**பொழிப்புரை: வி.மதிசங்கர்**



**வெளியீடு**

**அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன்**

**தேவஸ்தானம்**

**விகாரி வருடம் ஐப்பசித் திங்கள் சுவாதி நன்நாள்**

**28.10.2019**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் திருப்புகழ்" |
| ஆசிரியர் | : | தவ.தஜேந்திரன் |
| முதற்பதிப்பு | : | ஐப்பசி 2019 |
| வெளியீடு | : | ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம் கோண்டாவில் கிழக்கு |
| வடிவமைப்பு | : | தவ.தஜேந்திரன் |
| அட்டை | : | தவ.தஜேந்திரன், "கந்து", செப்புப்படிமம், 10"X15", 2019. |
| அச்சாக்கம் | : | சாயி பிறிண்டேர்ஸ், இணுவில் |
| பக்கங்கள் | : | vi + 22 |

| | | |
|---|---|---|
| Title of the Book | : | "Kondavil East Arulmiku Sri Gnanapalani Murukan Thuruppukaz" |
| Author | : | Thava.Thajendran |
| First Edition | : | October 2019 |
| Published by | : | Sri Gnanapalani Murukan Temple Kondavil East. |
| Designed by | : | Thava.Thajendran |
| Cover | : | Thava.Thajendran, "Kanthu", Copper Image, 10"X15", 2019. |
| Printed by | : | SAAJI Printers, Inuvil. |
| Pages | : | vi + 22 |
| Size | : | B5 |

© கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம்
Kondavil East Sri Gnanapalani Murukan Temple
ISBN: 978-624-5204-00-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



இத்திருப்புகழ் நூலானது எம்பெருமானின் அருள் நோக்கின் கீழ் எழுதப்பட்டு அவரின் திருவுளப்படியே வெளிவருவதை நினைத்து மனம் பூரிப்படைகிறேன். இத்திருப்புகழ், பழனி ஆண்டவரின் அற்புதங்களை காலத்தின் மீது எழுதிச் செல்கிறது. எம்பெருமானின் ஞான அருட் பிரபையைக் கட்டியங்கூறி நிற்கிறது.

இத்தகைய திருப்புகட் பாக்களை இயற்றிய அடியவருக்கும், பொழிப்புரை எழுதிய அடியவருக்கும் இந் நூல் வெளியீட்டில் முன்னின்று உதவிய அனைவருக்கும் அருள்மிகு ஞானப்பழனி முருகன் என்றென்றும் குறைவில்லா பேரின்பத்தையும் சுகவாழ்வையும் கொடுக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

உலகில் தர்மம் நிலை பெறவும் உயிர்கள் அனைத்தும் இன்புற்றிருக்கவும் நாம் அனைவரும் இத் திருப்புகழைப் பாராயணம் செய்து பக்தி அலையை பிரவாகிக்கச் செய்வோமாக. எங்கள் மனங்களில் பழனி முருகப்பெருமான் எழுந்தருள் புரியட்டும்

சர்வம் குகமயம்

சிவஸ்ரீ - ந. ரவீந்திரநாதக்குருக்கள்

பிரதம குரு
ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம்
கோண்டாவில் கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை



கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகப் பெருமானை உபாசிக்கவும் அவர் நிழலில் வாழவும் அவரது அற்புதங்களைக் கண்டு மெய்சிலிர்க்கவும் நாம் பேறு பெற்றோம். எம்பெருமானின் திருவிளையாடல் களையும் அவரது அருள் வீச்சையும் புகழையும் வெளிப்படுத்தும் திருப்புகழ் நூல் எழுதப்பட்டிருப்பது காலத்தின் தேவையாகும்.

ஆலயத்தின் நிகழ்வுகளை மனக்கண் முன்னே கொண்டுவரும் அற்புதப் படைப்பாக உருவாக்கப்பட்டிருக்கின்ற இத் திருப்புகழை நூல் வடிவில் வெளியீடு செய்வதற்கு நிதிப் பங்களிப்பு வழங்கியவர்களுக்கும், நூலினை அழகாக அச்சிட்ட சாயி பதிப்பகத்தினருக்கும், மற்றும் ஏனைய வழிகளில் உதவிகள் நல்கியோருக்கும் தேவஸ்தானம் சார்பில் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத் திருப்புகழ் நூல் எமது ஆலய வரலாற்றில் மிக முக்கிய ஆவணமாகத் திகழப்போகின்றது. முருகப்பெருமானுக்கு உகந்த கந்தசஷ்டி விரதகாலத்தின் முதலாம் நாளில் இப் பொக்கிசத்தினை வெளியீடுசெய்யும் அளப்பரிய பாக்கியம் எமக்கு கிடைத்துள்ளது. இவ் அரிய முயற்சியில் எம்மையெல்லாம் ஈடுபடுத்திய ஞானப்பழனி முருகப்பெருமானின் பாதார விந்தங்களை நன்றியோடு தொழுது கண்கள் பனித்து நிற்கின்றோம்.

வி.மதிசங்கர்<br>
கோண்டாவில் கிழக்கு<br>
அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



யாரோ ஒருவனாகக் கடந்து சென்ற கோண்டாவில் வீதியும் பழனி ஆண்டவர் கோயிலும் இன்று உயிரோடு கலந்த ஒன்றாக மாறியிருக்கின்றது. பழனி ஆண்டவரின் திருவுளம் என்ன என்பதை இன்னும் நான் அறியேன். இன்று அவரின் திருமுன் திருப்புகழ்ப் பாக்களோடு ஆன்ம பந்தத்தின் விலக்கமுடியாத ஒரு சாட்சியாகிறேன். இப் பாக்கள் அனைத்தும் அவரின் திருவடிகளுக்கு என் அன்புக் காணிக்கை.


கந்தப் பெருமானின் மீதான காதலுக்கும் பக்திக்கும் இடையில் மாபெரும் மௌனப் பரப்பைக் கடக்கவேண்டி இருந்தது. அங்கு நான் அடைந்த மௌனம் என் மன வெளியில் வெடித்துச் சிதறியபோது சொற்கள் பிறந்தன. அச் சொற்கள் காதலின் வெளியில் மீண்டும் ஒடுங்கிய போது இத்திருப்புகட் பாக்களிற்கான முதல் வரியைக் கண்டடைந்தேன். தொடக்கமும் முடிவும் அற்ற ஒரு பேருணர்வின் ஒரு பக்கத்தில் என் காதல் மறுபக்கத்தில் பக்தி. இவ்விரண்டிற்கும் இடையிலான முடிவற்ற யாத்திரையின் முதற் பேறே இத் திருப்புகட் பாக்கள்.

இப் பாக்களை காலம் மீண்டும் மீண்டும் பாடட்டும். இவற்றின் ஒலி வடிவம் கந்தப்பெருமானை ஆவாகனம் செய்யட்டும். உயிரின் மூலத்துட்புகுந்து ஆன்மீக மின் அதிர்வுகளை உற்பத்தி செய்யட்டும்.

தவ.தஜேந்திரன்
இருபாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ப்பணம்

கருவாகி உயிராகி கலியுகத்தின் இறையாகி
குருவாகி நிற்கும் பழனி ஆண்டவரின் திருவடிகளில்
இத் திருப்புகழ்ப் பாக்களைச் சமர்ப்பிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

இராகம்: மதுவந்தி
தாளம்: ஆதி (கண்டநடை)

தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான தனனானா

கந்து என உன்னை காதலொடு நானும்
கனிந்து பேர் சொல்லி உயிராலே

சொந்தம் என வாழ சோக இருள் போக
சுடரும் பெரு வாழ்வைத் தருவாயே

எந்தன் மன வானில் இலங்கும் மதியே உன்
எழில் முகம் காண வருவேனே

உந்தன் உறவாக உரிமையது தந்து
ஒருமுறை இளநகை புரியாயோ

எந்தன் நினைவாகி இதயக் கனலாகி
இருந்து வினை தீர்க்கும் குருநாதா

தந்த வடிவேலும் தங்க மயிலோடும்
தாங்கி எனைக் காக்க வருவாயே

சிந்தைதனை மேவி சிறந்த தவயோகி
செந்தமிழ் கொண்டு துதிபாட

வந்து கோண்டாவில் வதியும் முருகோனே
வளர்கலை கொண்ட பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உயிரின் ஆதாரமாகிய உன்னை 'கந்து' என நான் காதலோடும் கனிவோடும் செல்லமாக பெயர் சொல்லி அழைப்பதால், எனக்கும் உனக்குமான உயிருக்குயிரான எமது உறவின் தன்மையால், என் வாழ்வின் சோக இருள் நீக்கி எனக்கு ஒளிமிக்க பெருவாழ்வைத் தரவேண்டும் எனக் கேட்கிறேன் முருகா! எனது மனம் எனும் வானத்தில் பிரகாசமாக ஒளிரும் சந்திரன் போன்ற உனது அழகான முகத்தைக்காண நான் வரும் வேளையில் உனது உறவாக என்னை ஏற்று ஒரு முறை உன் அழகிய உதடுகளால் புன்னகை புரிவாயோ? என்னுடைய மனம் முழுவதும் ஒருமுகப்பட்ட நினைவாக நிறைந்து, இதயத்தினுள் பிரகாசம் பொருந்திய யோகச் சுடராக இருந்து என் கர்மவினைகளைத் தீர்க்கும் குருவானவனே! நீ உனது தாய் தந்த சக்தி வேலோடும் தங்கநிற மயிலோடும் வந்து துன்பவேளைகளில் எனைத் தாங்கிக் காத்தருள்வாய். மனதால் மேம்பட்ட தவத்தில் மிக்க யோகிகள் செந்தமிழால் உன்னைப் புகழ்ந்து பாட அதனால் மனமுவந்து கோண்டாவிற் பதியிலே மூர்த்திகரமாக பக்தர்களோடு கூடிவாழுகின்றாய் பழனி முருகப்பெருமானே.

கந்து – கந்தம் என்றால் கலத்தல். ஆறு குழந்தை உருவங்கள் ஒன்று சேர்ந்து உருவானவர் என்பதால் கந்தன் என பெயர் பெற்றார் முருகன். கந்தன் என்ற பெயரின் சுருக்க வடிவமே கந்து என்பதாகும். கந்து என்பதற்கு உயிரின் ஆதாரம் என்று இன்னொரு பொருளும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: ஹிந்தோளம்
தாளம்: சதுஸ்ர ஏகம் (கண்டநடை)

தந்ததன தானனன தந்ததன தானனன
தந்ததன தானனன தனனான

சிந்தைநிறை கோண்டாவில் வந்தினிய செந்தமிழில்
சந்தமொடு சிந்தவிழ நடமாட

தந்தையொடு தொந்திமுகன் நந்தியும் பதஞ்சலியும்
விந்தையொடு உந்தனது பதம்காண

மந்திர முகத்திலொரு சந்திரனும் சூரியனும்
நின்றொளி பரப்பியிரு விழியாக

கந்தனுனை வந்தணைந்த கன்னியிருவர் மகிழ
நந்தவனம் எங்கினும் மலர் தூவ

தந்ததன தான என தண்டையொலி வந்துவிழ
தங்கமயிலும் அரவும் பொங்கியாட

இந்திரனும் வந்தபல கந்தருவரும் பணிய
உந்தன் முகமாறும் ஒளிர்ந்தருள்வீச

தந்தையென உந்தனினை சந்ததம் விரும்புமனம்
சிந்தும் விழி நீரிலே மிதந்தாழ

வந்தெனது சொந்தமென உந்தனரவிந்தம் தொழ
நின்றுவரம் தந்தருளும் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதால் மிகவும் விரும்பப்படும் கோண்டாவிற் பதியில் நீ வந்து தெய்வமாக உறைந்து இனிமையான தாளக்கட்டோடு கூடிய செந்தமிழ்ப் பாடல்களிற்கு உன் ஆலயத்தில் ஆடல் புரிகின்றாய் முருகா. அவ்வாறான உன் திரு நடனத்தைக் கைலாயத்தில் இருந்தபடி உனது தந்தையாகிய சிவனும், தமையனாகிய விநாயகரும், நந்திதேவரும், பதஞ்சலி முனிவரும் அதிசயித்துக் காண்பார்கள். சந்திர சூரியர்கள் மந்திரத்தன்மை மிக்க உனது அழகிய திரு வதனத்தில் ஒளிபொருந்திய கண்களாகி நின்று உலகிற்கு வெளிச்சத்தை தந்துகொண்டிருக்க கந்தப் பெருமானாகிய உன்னோடு வள்ளி, தெய்வயானை இருவரும் மகிழ்ந்திருக்கும் உன் நந்தவனம் வாசனை பொருந்திய மலர்களால் நிறைந்திருக்கும்.

நீ அகம் மகிழ்ந்து ஆடும் போது உனது கால்களின் தண்டை அணிகலனானது 'தந்த தன தான' என ஒலி எழுப்ப, தங்க நிறத்தையுடைய உன் வாகனமான மயிலும் அதன் கீழ் நாகபாம்பும் அந்த ஒலியினால் உணர்வு பொங்கி ஆடும். நாள்தோறும் உன்னை என் தந்தையாக மனதால் நான் எண்ணி விரும்பும் வேளையில் என்னுடைய கண்கள் ஆனந்தக்கண்ணீரில் மிதக்க நீ என் முன்னே வந்து என்னை உனது சொந்தமாக ஏற்று உன்னுடைய தாமரைமலர் போன்ற திருப்பாதங்களைத் தொழுவதற்கு வரம் தந்து நின்ற திருக்கோலத்தில் அருள் புரியும் சண்முகப்பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩

தாளம்: சதுஸ்ர ஏகம்

தந்ததன தத்ததன தந்ததன தத்ததன
தந்ததன தத்ததன தனதானா

சந்தண முகத்தழகா செந்தமிழ் மொழிக்குயிரே
சிந்தனையின் உட்பொருளே உயர்வாகி

நின்றபழ நிக்கழகே தண்டமதெடுத்த குரு
தந்தை தனக்குற்ற பொருள் பகர்வாயே

மந்திரஒலிக்குள் குவி மண்டலவெளிக்குள் அவிழ்
சந்திர கலைக்குள் நின்று ஒளிர்வாயே

விந்தினது சத்தெனவும் வெந்தசிவ தத்துவமும்
வந்த உயர் சித்தும் உந்தன் அருளாளே

உந்தனெதிர் வைத்த கும்பம் அத்தனையும் உள்ளொளிர
உற்றகலையில் வரைந்த அறுகோண

யந்திரத்தை வைத்ததொரு செம்புலத்தில் உற்றவுறு
சுந்தரதலத்தில் நின்று உறைவோனே

சிந்தைமனம் அத்தனையும் கந்தனுனை வைத்துறுதி
கொண்டு அருள் பெற்றுவளர் ரவிராச

அந்தணர் தொடுத்த யக்ஞ செந்தழல் நெருப்பில் வந்து
சிந்தைமகிழ திகழ்ந்த பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தணம் போன்ற குளிர்ச்சியான அழகான முகத்தை உடையவனே! தமிழ் மொழிக்கு உயிரானவனே! எனது சிந்தனையின் அடிநாதமாக விளங்குகின்றவனே! உயர்ந்த சிறப்புக்களை உடைய பழனிமலைக்கு அழகைத் தருபவனே! கையில் தண்டாயுதத்தைக் கொண்டவனே! தந்தைக்கு பிரணவமந்திரத்தை உபதேசித்தவனே! சூட்சும உடலானது ஓம் எனும் மந்திர ஒலிக்குள் ஒடுங்கிப் பரமண்டல வெளிக்குள் விரியும்போது அங்கு பிறக்கும் குளிர்ச்சியான சந்திர கலை எனும் உள்மூச்சினுள் ஒளிர்பவனே! யோக பலத்தினால் (காமத்தை வென்று) விந்து ஒடுங்கும்போது உடல் சிவமாக அதன்பேறாய் உயர்ந்த சித்துக்களை அருள்பவனே.

உனது ஆலயத்தில் உந்தன் முன்னே வைக்கப்படுகின்ற கும்பங்கள் எல்லாம் உன் தெய்வீக அருளினால் ஒளிரும் வேளையில் நீ அறுகோண யந்திரத்தில் ஆவாகனமாகி சிவந்த மண்ணை உடைய கோண்டாவிலில் அமைந்த அழகான ஆலயத்தில் உறைந்து அருள் புரிபவனே. தன் மனம் முழுவதிலும் உன்னையே உறுதியாகப் பற்றி உன்னுடைய அருளைப் பெற்று உன்னைப் பூசிக்கின்ற ரவீந்திரராச அந்தணர் செய்த வைகாசி விசாக யாக அக்கினியில் பக்தர்கள் எல்லோரினதும் மனம் மகிழும்படியாக காட்சிதந்த முருகப் பெருமானே.

• யக்ஞம் – யாகம்
• சந்திரகலை – இடது நாசி வழியாக ஓடும் மூச்சு.
• மண்டல வெளி – பிரபஞ்சத்தின் அம்சமாய் மனித உடலில் சூட்சம சரீரத்தினுள் இருக்கும் வெளி.
• 2012 ல் நிகழ்ந்த வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்த நாளில் (2012.06.03, வைகாசி விசாகம்) சிவஸ்ரீ ரவீந்திரராசா குருக்கள் செய்த யாகத்தில் பூரணாகுதி கொடுக்கும் வேளையில் பழனி முருகப்பெருமான் அக்கினியில் காட்சிதந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

இராகம்: கல்யாணி
தாளம்: ஆதி (கண்டநடை)

தந்ததன தானா தந்ததன தானா
தந்ததன தானா தனதானா

தென்பழனி வாசா என் இதயநாதா
உந்தன் அடிபேணி உயர்வாக

இந்த உலகேகி வந்த முருகேசா
எந்தன் குருவாக சரயோக

தந்திரமும் மோன மந்திரமும் தந்து
இந்தின் நிலையேக பரஞான

விந்தையது கூட எந்தனிறைவா நீ
என்றும் நிறைவான அருள்தாராய்

உந்தனதுமேனி எங்கும் எழில் நீறு
ஒளி நுதல் அக்க மணிமாலை

கந்தை இடையோடு வந்துமயில் மீதில்
எந்தன் மனவானில் தெரியாயோ

முந்தை வினையோட நந்தி மகவோடு
தந்தை சிவனோடும் உமைமேவ

வந்து கோண்டாவில் வரதக்கரமீந்து
வாழும் குமரேசப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் தமிழகத்தில் இருக்கும் பழனிமலையில் வாசம் செய்பவனே! என் இதயத்தின் துடிப்பாக இருப்பவனே! உந்தனது திருப்பாதங்களை வணங்கி இவ் வையகத்தில் நான் உயர்வுபெற எனை நோக்கி கோண்டாவிற் பதியில் வந்து எனக்கு குருவாக இருந்து யோகக் கலையின் நுட்பங்களை உணர்த்தி மௌனத்தால் உணரப்படும் அஜபா மந்திரத்தை உபதேசித்து குண்டலினி தத்துவத்தை அடைந்து பிரம்ம ஞானம் பெறும் வித்தை கைகூட அருள் தருவாய். உந்தனது திருமேனி எங்கும் வாசனை பொருந்திய திருநீறு விளங்க ஒளி பொருந்திய நெற்றியின் மேல் உருத்திராக்க மாலையோடும் இடையில் கோவணத்தோடும் மயில்மீதமர்ந்து என் மனமாகிய வானில் காட்சிதரும் பழனி ஆண்டவனே. முற்பிறப்பில் நான் செய்த வினைகள் இல்லாதுபோக வேதங்களின் பொருளாகிய விநாயகரோடும் சிவன், உமையோடும் கோண்டாவில் பதியில் வந்து கையில் வரதமுத்திரையுடன் காட்சி தரும் பழனி முருகப் பெருமானே.

- சரயோகம் – மூச்சுப்பயிற்சி
- அஜபா மந்திரம் – வாயினால் உச்சரிக்கவோ உபதேசிக்கவோ முடியாத மந்திரம். இது மௌனமந்திரம் என்று குறிப்பிடப்படுகின்றது.
- இந்தின் நிலை – இடைகலை எனும் மூச்சினால் ஏற்படும் அருள் நிலை.
- குண்டலினி – மனித உடலில் மூலாதாரத்தில் பாம்பு வடிவில் மூன்றரை சுற்றில் உறையும் சக்தி குண்டலினி என்று குறிப்பிடப்படுகிறது. மூச்சுப் பயிற்சியினால் சுழுமுனை நாடி சுத்தமடைய இச் சக்தியானது சிரசை நோக்கி மேலெழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

இராகம்: சுமனிஷ றஞ்சனி
தாளம்: ஆதி

தான தனனனா தான தனனனா
தான தனனன தனனான

கோலமயிலொடு சேவல் இசைந்திட
வேலும் அரவுரு வகை கீறி

நீல வெளியிடை ஏறி உயர்கொடி
ஆடும் நிகழ்வினை மனம்நாட

நாளில் சிறந்த வைகாசி வளர்பிறை
கோளில் இணைந்திடும் ஒருநாளில்

தாளம் தொடுத்துயர் கானம் இசைத்திட
வேத ஒலியிடை வருவாயே

மாலும் சிவனுமை வேள முகவனும்
பாவை திருமகள் உடன் கூடி

ஆவலுடன் எழில் நீரில் மகிழ
விசாக வேளையில் வருவோனே

காவலென உனை நாளும் பணிந்திடும்
கனக வயல் நிறை கோண்டாவில்

காலம் முழுவதும் உறைந்து திருவடிக்
காதல் உவந்திடும் பெருமாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான மயில், சேவல், வேல், பாம்பு ஆகியவை வரையப்பட்ட கொடியானது மகோற்சவ காலத்தில் நீல வான் பரப்பில் ஏறி உயர்ந்து பறக்கும் நிகழ்வினைக்காண மனம் ஏங்கும்போது பூமியானது வைகாசி மாத வளர்பிறைக்காலத்தை அடையும் வேளையில் இனிமையான தாளங்களும், கானங்களும் முழங்க வேதபாராயண ஒலியோடு நீ பக்தி பூர்வமாக வருவாயே. அழகிய வசந்தமண்டபத்திலே சந்தானகோபாலர், சிவன், உமை, விநாயகர், திருமகள் ஆகியோருடன் பஞ்ச உற்சவ மூர்த்திகளாக கூடி மிக்க ஆவலுடன் தீர்த்தமாட விசாக நட்சத்திர வேளையில் திருவீதிஉலா வரும் முருகப்பெருமானே! உன்னைக் காவலென தினமும் பணிந்து தொழுவதும் பொன்நிற வயல்களை உடையதுமாகிய கோண்டாவிற் பதியிலே காலாதிகாலமாக உறைந்த உனது பாதங்களைப் பற்றும் எம் மீது காதலோடு இருக்கும் முருகப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: ஹம்சநாதம்
தாளம்: ஆதி

தந்தன தந்தன தந்தன தானா
தானன தந்தன தந்தனதானா

சங்கொடு கிண்கிணி சல்லரி மேளம்
சாமரை இன்ப நறும்புகைத்தூபம்

தத்திமி தகதிமி தகஜெனு தோமென
மங்கல வாத்திய இன்னிசைகீதம்

அந்தணர் மந்திர தந்திர வேள்வியில்
ஆறொடு பத்தின் இன்னுபசாரம்

வந்தனை தந்து சுமந்தொரு கும்பம்
வலமுறை வந்தது வடிவேலே

கண்களில் நீரும் காதலும் நெஞ்சில்
கனல உருவேறி அருள்வீச

மங்கல மந்திர நீரது பொங்க
மின்பிரபை சிந்தும் அபிசேகம்

சுந்தர சண்முக செந்தமிழ் வேளே
இந்திரநீல மயில்வரு வேலா

முந்தையில் வந்து மகிழ்ந்து கோண்டாவில்
வெந்துயர் தீர்க்கும் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு, மணி, சல்லரிமேளம் ஆகியவை ஒலிக்க, பக்தர்கள் சாமரை வீச, ஆலயம் எங்கும் இனிய வாசனை பொருந்திய தூபப்புகை நிறைய, தவில் நாதஸ்வரங்கள் மங்கல இசை எழுப்ப, அந்தணர் தமது வேள்வியில் வேத, மந்திர, தந்திர ஆவாகனத்தோடு பதினாறு வகை உபசாரங்களும் சமர்ப்பித்து வணங்க, முருகனை ஆவாகனப்படுத்தி சிவாச்சாரியாரின் தலைமீது சுமந்து வீதிவலம் வரும் யாகசாலையின் பிரதான கும்பத்தின் மங்கலகரமான மந்திரத் தன்மை பொருந்திய புனித நீரானது மூல மூர்த்திக்கு அபிஷேகிக்கப்படும் பிரகாசம் மிக்க காட்சியை பக்தர்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீரோடும் நெஞ்சில் மிக்க காதலும் பெருகி, கலை உருவேறி, பக்திப் பரவசத்தோடு காண்பார்கள். அழகான ஆறுமுகங்களை உடைய தமிழின் தலைவனே! இந்திரன் மயிலாக மாற அதன் மீது அமர்ந்தவனே! நெடுங்காலத்தின் முன்பு கோணடாவிற் பதியில் வந்துறைந்து மிகக்கொடிய துயரங்களைத் தீர்த்து நிற்கின்ற பழனி முருகப் பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

இராகம்: மோஹனம்
தாளம்: சதுஸ்ர ஏகம் (கண்டநடை)

தானதன தானதன தானதன தானா
தானதன தானதன தானதன தானா

மேலைப்புளி மேவி விளையாட வருவேலா
கோலவடிவோடு எழில்மேவும் குமரேசா

காலமதை ஆளும் கலைபைரவனின் தோளில்
காதலுடனாடி இன்பக்காட்சி உகந்தாயே

வேலுமெழிற் சூலமொடும் வீதியெங்குமோடி
பாலரிவர் பைய நடமாடிவருங் கோலம்

நாளும் நவகோளும் இந்த நானிலமும் பேணி
நறுமலர்கள் தூவி நவின்றோதும் முறையாலே

காலவெளி நின்று சுடர்கின்ற கதிராட
கலைமதியும் வானிலெழு தாரகையுமாட

காளி உவந்தாட அருள் கவிந்த வேம்பாட
பாலமுருகேசா நீ பைரவனோடாட

கானமயில் ஆட கவின் நாகமசைந்தாட
நாயுமுவந்தாட நடமாடி வருஞ்சோலை

காணுமெழிற் கோண்டாவில் கவினுறவே நின்று
காவல்புரிகின்ற அருட் கந்தப்பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் மேற்கு வீதியில் உள்ள புளியமரத்தில் வைரவரோடு விளையாட விரும்பி வரும் வேலனே. குமரேசன் எனும் பெயரில் மிக்க அழகோடு திகழ்பவனே, காலத்தின் அதிபதியாகி அண்டத்தை ஆளும் பைரவனின் தோளில் நீ பாசத்தோடு சாய்ந்து விளையாடி இனிய காட்சி தந்தாய். அழகிய வேலுடனும் சூலத்துடனும் ஆலய வீதியெங்கும் சிறுவர்களாக விளையாடும் காட்சியை நவகோள்களும் நானிலமும் நறுமலர்கள் தூவி முறையோடு பேணி நிற்கிறது.

நீ வைரவனோடு விளையாடி நடமாட அதனைக் கண்டு மகிழ்ந்து காலத்தின் வெளியில் நின்று சூரியன் ஆடுவான். அதனைக் கண்ட சந்திரனும் நட்சத்திரங்களும் ஆடிநிற்கும். அதற்கிணையாக அண்ட சராசரங்களின் தாயாகிய காளி ஆட அவளின் அம்சமாகிய வேம்பு உன் ஆலயத்தில் தன் கிளைகளை அசைத்தாடும். உனது விஸ்வரூபத்தைச் சுருக்கி பாலகனின் வடிவத்தில் நீ பைரவனோடு ஆடுவதைக் கண்டு மயிலும் பாம்பும், நாயும் விளையாடிவரும் சோலையாகிய அழகு மிக்க கோண்டாவிற் பதியினைக் காவல் புரிகின்றாய் கந்தப்பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

இராகம்: அஹீர் பைரவி
தாளம்: ஆதி

தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த தனதான

கருவாகி நெஞ்சின் கனலாகி எங்கும்
உயர்வான பழனி மலைமீதே

குருவாகி நின்று ஜெபமாலை தந்து
நிறைவான மோன நிலை கூறி

வருவாய் கலாப மயில் மீதிலேறி
வடிவேலும் கையில் ஒளி வீச

அறுகோணமாகி அதன்மீதெழுந்து
சிவமாகி எங்கும் சுடர்வோனே

உறுநோய்கள் வந்துஉடல்சோரவெந்து
உளம் வாடியோடி வருநாளில்

திருநீறு தந்து உருவேறி நின்று
திருவாய் மலர்ந்து அருள்வோனே

முருகா உன்கோயில் முறையான பூசை
நிறைவேறக் காப்பைத் தருவோனே

திருவாகி எங்கும் திகழ் கோண்டாவிற்
குருவாகி நிற்கும் பெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து உயிர்களுக்கும் கருவாகி, இதயத்தின் அனல் போன்ற உணர்வாகி, உயர்வு நிறைந்த பழனி மலைமீது குருவாகி நின்று, ஜெபமாலை தந்து, நினைவுகளை ஒடுக்கும் மௌனநிலை தந்து, அழகிய தோகை உடைய கலாப மயில் மீது ஒளி வீசும் வேலைக் கையில் ஏந்தி நீ வருவாய். அறுகோணத்தின் அதிபதியாகி அதன் மீது சிவ அம்சத்தோடு நின்று சுடர்பவனே. உலகத்தை வருத்தும் கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டு உடல் சோர்ந்து உள்ளம் வாடி அடைக்கலம்தேடி உன்னிடம் வரும் நாளில் மிக்க உருவேறி நின்று திருநீற்றினை பிணி நீக்கும் மருந்தாகத் தந்து உனது திருவாயினால் அருள்வாக்கும் சொல்பவனே. உனது ஆலயத்தின் பூசைகள் செவ்வனே நடைபெற மனதிற்கு காப்பாய் நிற்பவனே. இலட்சுமிகடாட்சத்தோடு திகளும் கோண்டாவிற் பதிக்கு குருவாகி நிற்கும் பழனி ஆண்டவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௭

இராகம்: நாஷிகாபூசணி
தாளம்: மிஸ்ரசாபு

தந்தன தனதன தந்தன தனதன
தந்தன தனதன தனதான

சக்கரமுறைந்திடும் சக்தியில் கிளர்ந்து நல்
அக்கினி அரவுபொன் ஒளிவீச

சிற்பர வெளிபுகும் அற்புதமுறையினை
சிக்கென அருளிடும் குருநாதா

சத்திய நெறியினை சண்முக வடிவினை
உற்றுயர் நிலைபெற வகைகூறி

சத்துவ நிலையுடன் உத்தம குணமுயர்
சித்திகள் பல அருள் சிவைபாலா

விக்கினமற உறு வெற்பது பொடிபட
அற்புத அயில் விடும் பெருவீரா

சித்திர சபையினில் சக்தியர் மருவிட
தத்துவ நிலையினில் அமர்வோனே

விற்பனம் உயர்கலை வித்தைகள் பொலிந்திடும்
அற்புதக் கோண்டாவில் அமர்வோனே

உக்கிர அருளுடன் விக்கிரமம் பெருக
சற்குரு என வரும் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலின் சூட்சுமமான சக்கரங்களில் உறைந்திருக்கும் பிராண சக்தியினால் கிளர்த்தப்படும் குண்டலினி எனும் குளிர்ச்சி மிக்க நெருப்பாலாகிய அரவமானது (பாம்பு) பொன்நிற ஒளி வீசி எழ உயிரானது பாவவினைப் பதிவுகளில் இருந்து விடுபட்டு மிகவும் கனிவாகி அறிவின் எல்லைகளால் அறியமுடியாத பரவெளிக்குச் செல்லும் முறையினை குருவாக வந்து காலத்தின் தேவைக்கேற்ப விரைவாக அருள்வாய் முருகா. மெய்யான ஆன்மீகப் பாதையையும் உனது ஆறு முகங்களின் பொருளினையும் உணர்ந்து உயர்நிலை அடையும் வழியினையும் கூறி சாத்வீக மனநிலையுடன் உத்தம குணங்களையும் அதன் விளைவான உயர் சித்திகளையும் அருளும் உமையின் புத்திரனே. தேவர்களின் இடையூறுகள் நீங்க வேல் கொண்டு அசுரர்களின் மாய மலைகள் பொடிபடச் செய்த பெரும் வீரனே. அலங்காரங்கள் நிறைந்த சபையில் உனது சக்தியரோடு அமர்ந்து அதன் உட்பொருளையும் சொல்பவனே. வித்துவ ஆற்றலும் உயர்ந்த கலைவித்தைகளும் பல்கிப்பெருகும் இறை அற்புதங்கள் நிறைந்த கோண்டாவிற் பதியில் அமர்ந்திருப்பவனே, அருள் உக்கிரத்தோடும் பெரும் பலத்தோடும் மெய்யான குருவாக எங்கள் முன் வருகின்ற பழனி ஆண்டவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

இராகம்: மாயாமாளவகௌளை
தாளம்: ஆதி

தனதனதனதன தனதனதனதன
தனதனதனதன தனனான

சரவணபவ என அறுபதம் துணைவர
சரமது குவிபட கனல் மூள

விரிசுடர் எழமனம் விழஅதன் வெளியிலே
வினையுடல் கெடஉயிர் கனிவாகி

அரனென அமர்ந்திட அயன்வழி திறந்திட
ஆயிரம் இதழ்களின் மலர்விரிய

சிரமது ஒளிபெற சிவநிலை பெருகிட
அகவிழியினுள் உனை உணர்வேனோ

வரதமும் அபயமும் வளர்சட் கோணமும்
வச்ரமும் கரத்தில் வடிவேலும்

இரவியின் பிரபையும் இளம்பிறைக் கலைகளும்
உனதுபொன் முகத்தினில் நிழலாடும்

அருவமும் உருவமும் ஆனந்த நடனமும்
அட்சரம் ஆறின் பொருளதுமாகி

அருள் வளர் கோண்டாவில் அமர்ந்துறைவோனே
திருநிறை குமரவேட் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணபவ என்ற ஆறு அட்சரங்களை உச்சரித்து சுவாசத்தை ஒடுக்கி மூலாதாரத்தில் யோக அக்கினியானது பெருகும்போது அதன் பேறாய் அகஒளி பெருகி மனம் வெறுமையாக அந்த இன்மைக்குள் வினைப்பதிவுகள் இல்லாமல் போக உயிரானது பரிசுத்தமடையும். அதன் பேறாய் ஆன்மசாதகன் சிவத்தன்மையோடு மௌனமாக அமர கபால வாசல் திறந்து ஆயிரம் இதழ்களையுடைய சகஸ்ராரச் சக்கரம் சுழலத் தொடங்கும். சிரசானது ஒளி பெற்று சிந்தனை அற்ற சிவநிலை பெருக அகக்கண்ணினால் உனது அருள் கொண்டு உனை உணர்வேனோ முருகா?. வரத, அபய கரங்களும் சட்கோணம், வச்சிர ஆயுதங்களுடன் வேலும் பிடித்து சூரியப் பிரகாசத்தோடு சந்திரனின் குளிர்ச்சியும் உனது முகத்தில் பெருக அருவமாய், உருவமாய், இன்ப நடனமாய், ஆறு அட்சரங்களின் பொருளாய் அருள் வளரும் கோண்டாவில் எனும் புண்ணிய பதியில் அமர்ந்து அருளும் குமரவேட் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சாமி பிறின்டேர்ஸ் +9477 2209474

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org